**செ. கு. எண்: 030** **நாள்: 21.02.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 21.2.2018

காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் **18.2.2018** அன்று வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், சிறுனமல்லி கிராமத்தைச் சேர்ந்தவர்கள், துக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்த வாகனமும், தனியார் பேருந்தும், சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில், TATA ACE வாகனத்தில் பயணம் செய்த திரு.குப்பன் என்பவரின் மனைவி திருமதி பரிமளம், திரு.முருகன் என்பவரின் மனைவி திருமதி சின்னபொன்னு, திரு.மணி என்பவரின் மனைவி திருமதி பஞ்சமி, திரு.சண்முகம் என்பவரின் மனைவி திருமதி துலுக்காணம், திரு. ரவி என்பவரின் மனைவி திருமதி முத்தம்மாள், திரு. மணி என்பவரின் மனைவி திருமதி ராஜாகன்னி, திரு. காளி என்பவரின் மனைவி திருமதி இந்திரா, திரு. வேணு என்வரின் மனைவி திருமதி சுமித்ரா மற்றும் திரு. முருகன் என்பவரின் மகன் திரு. ஆலவட்டான் ஆகிய ஒன்பது நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் 15 நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது உத்தரவின் பேரில், ஊரக தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின், மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, மீட்புப் பணிகளை மேற்கொண்டு, இறந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர். காயமடைந்தவர்களை சந்தித்து அவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிப்பதையும் உறுதி செய்தனர்.

இந்த சாலை விபத்துக்களில் அகால மரணமடைந்த 9 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/–ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/–ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**